
# மானுடம்

சிற்றிதழ் - 10



ஆசிரியர்

திருமலை சுந்தா

10/-

நம்பிக்கை
பிரார்த்தனையை
விட மிக நீண்டதானது

அட்டைப்படம் : சசி




மானுடம்

172, பிரதான வீதி, திருக்கோணமலை

சிற்றிதழ் –10
2009 – ஐப்பசி

**இதழில்....**


- புதிர்
- என்னைத்தூக்கி
- மனிதம்
- அடையாளம்
- பொய்யும் உண்மையும்
- சொல்லத்தான் நினைக்கின்றேன். 6
- வஞ்சிமாநகரமும் வஞ்சியும்..


ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பு



## ஆசிரியரின்....

மானுடம் சிற்றிதழ்-10 வெளிவந்து விட்டது மகிழ்ச்சிதானே.

கவிதைகள் மானுடத்திற்கு நிறைய வருகின்றன. கவிஞர்களின் களமாக பயிற்சி தளமாக மானுடம் சிலவேளை தன்னை மாற்றிக் கொள்வது மகிழ்ச்சியே.

ஆய்வுநோக்கில் இலக்கிய கட்டுரைகள் தேவை. எழுதுங்கள். தரமானவைகள் கட்டாயம் பிரசுரம் பெறும்.

கவிதைகள் இனிவரும் இதழ்களில் தொடர்ந்தும் வெளிவரும் பக்கங்கள் போதாது கூட்டவும் முடியாத நிலை மானுடம் தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

2010ல் பக்கங்களின் எண்ணிக்கையை கூட்ட எண்ணுகின்றோம். பார்ப்போம்.

பிறகென்ன.... அடுத்த இதழில் மனமாற பேசுவோமே!


அச்சு: அஸ்ரா பிரின்டர்ஸ்
திருகோணமலை.





# புதிர்

- மோ. தனுபவன்



சங்கீதாவின் நினைவுகள் பின் நோக்கிப் பாய்ந்தன.

அந்த சாய்வு நாற்காலி - அம்மாவின் மறைந்து போன வெண்மையான உருவம் - அவனின் ஒய்யாரமான இருத்தல் அவள் கண்ணீரை வரவழைக்காமல் பூத்த முகத்துடன் அழுதுதான் கொண்டிருந்தாள்.

அவள் இப்படி நடக்குமென்று அனுவளவும் எதிர்பார்க்கவில்லை. அம்மாவும், அவளை உயிருக்குயிராய் நேசித்த மதனும் எங்கே?

அவளின் மனம் இந்த கேள்வியை எத்தனை தடவைகள் தான் கேட்டுவிட்டன விடைகாண முடியாத புதிரொன்று அவளின் மூளையைக் குழப்பிக்கொண்டிருந்தது.

தன்னால் முடிந்தவரை பலதடவைகள் கொழும்புக்கும் போய் வந்து விட்டாள் - செலவுதான் மிச்சம்.

அவர்கள் எங்கே?

பொலிசாரின் காணாமல் போனவர் பட்டியலில் அவர்களும் இடம் பிடித்தது தான் மிச்சம், பலனில்லை.

அவர்கள் எப்போது வருவார்கள்? அல்லது இனிமேல் வரவே மாட்டார்களா?? அவர்களுக்கு நடந்ததென்ன? "புதிரொன்று" அவளை குழப்பிக் கொண்டிருந்தது.

தீமை செய்யும் இறைவன்
விடும் கண்ணீர் மழை

ஆகாயத்தின் உமிழ் நீர்
முள்ளின் நுனியில்
பனித்துளி

-அப்துல் கையூம்-

# என்னைத்தூக்கி வெளியே வீசுதல்

ஏறுவெயில் பயணங்களுடன்
யிர்ப்பித்தலை
வேண்டி நிற்கும்
தேசத்தின் இன்றைய வரலாறு
சோகமான நேரமிது

இருப்பின்
சிறகை உடைத்தார்கள்
தமது பொழுதையும்
நமது காலத்தையும்
கடைசியாக
நமது நிழலையும்



நிலவு, காற்று
இன்னும் நட்சத்திரங்கள்
மரங்கள், பறவைகள்
மற்றும்
நதியினதும் உடல்களில்
யார் யாரோ
குத்திக்கிழித்த காயங்கள்
பதறிக் கதறுவதும்

வாழ்நாளின் நகர்வில்
எதிர் கொள்கிறேன்
என்னிடம் ஒரு புன்னகைச் செடி
வளர்ந்து கொண்டிருந்தது
இப்போது அதன் அடையாளங்கள்
எனது கவிதையில் மட்டும் இருக்கிறது
மிக அழகாகவும் மிக புதுமையாகவும்
களவு போனதை உணர முடிகிறது. ✸

–கிண்ணியா அபி முகம்மது நா:.பிஉ ஸகீ

# ஒரு பூவின் ஆசை

-வேதுல சத்ய நாராயணா

மாதர் சூடுவர்
எனக்கு மகிழ்ச்சியில்லை
ராஜாக்களின் போகத்தில்
சந்தோஷமில்லை
மதவெறியூட்டும் கற்சிலைகளின்
பூசைக்குப் போகிறேன்
அதிலும் திருப்தியில்லை

தேனீ. . . .
என்னைச் சுற்றி வருகிறது
சுகமில்லை
விடுதலைக்காக சிறந்த
வீரர் கல்லறையில்
விழுகிறேனே
அப்போது தான்
பிறந்த பயனைப்
பெறுகிறேன்.

**(தெலுங்கு கவிதையின் தமிழாக்கம்)**

## வறுமை

கண்ணாடியைத்
துடைக்கத் துடைக்க
என் முகத்தின் அழகு
மேலும்....
தெளிவாகத்
தெரிகின்றது.

**- எஸ். வைதீஸ்வரன் -**





# அடையாளம் ....

ஆர். சங்கவி

சமையல் செய்தல்
படுக்கையை விரித்தல்
குழந்தை பெறுதல்
பணிந்து நடத்தல்
இவைகளே எனது
கடமைகள் ஆகும்.



கற்பு பற்றியும்
மழை பெய்யுமென்பது
பற்றியும்......
கதைக்கும் அவர்கள்
எப்போதும் எனது
உடலையே நோக்குவர்
கணவன் தொடக்கம்
கடைக்காரன்
வரைக்கும்
இதுவே வழக்கம். ✸

## வறுமை

பழைய சோறு
கேட்க வந்த
மனிதனைப் பார்த்து
தெம்பாய்க் குரைத்தது
மூன்று வேளையும்
பாலைக்குடித்து
இறைச்சியை விழுங்கும்
மாடி வீட்டு நாய்

**- பூங்குழலி -**

## ஹைக்கூ...

கண்ணீரால்
கவிதை எழுதுகிறது
மெழுகுவர்த்தி

............

எப்போது மழைவரும்
குடை வியாபாரத்துக்காக
ஏங்கும் வியாபாரி

..............

விளையாட்டு
வினையானது
விளக்கில் விட்டில்கள்

**–டினோத்–**

# – மனிதம் –

3

– சுதந்திரன் –




எடுத்தற் கெல்லாம் நீ
இறை தன்னைத் திட்டாதே!
படுத்துக்கிடந்து விட்டுப்
பாழ்வறுமை என்னாதே!
யாதும் ஊர் என்றெண்ணு!
யாவரும் கேளிர்தான்!
ஓதும் நெறி யெல்லாம்
ஓர் நெறியே என்று நினை!
நூலைப் படித்தாயேல்
நுண்ணறிவு பெற்றிடுவாய்!
நூலிரண்டைக் கற்றாலே
நல்லறிவு வந்து விடும்!
'மனிதம்' உடையவனே
மனிதன், அதனாலே
'மனித'த்தை நீக்காதே
மற்றோரையும் நேசி!
எல்லார்க்கும் எல்லாம்' என்
றெதிர் காலம் வரவுளதால்
வல்லாரும் நல்லாராய்
வந்தே இணைந்திடுவார்!
எல்லோரும் ஓர் குலமாய்
எல்லோரும் ஓர் நிறையாய்
எல்லோரும் மன்னர்களாய்
இருப்ப ரென்றார் பாரதியார்!

(முழங்கும்....)

யோசியாமல்
நடக்காதிங்க
ரவுண்
சிறுத்துப்போச்சு
வாகனங்களின்
வரவுபாருங்க
அப்பப்பா...
யோசிக்காமல்
நடக்காதீங்க......

- தானு -






2





# பொய்யும் உண்மையும்.....

– இசைவிமி–



ஒரு கணவன்.... ஒரு மனைவி........
நடுச்சாமத்தில் கண்விழித்துப் பார்த்தான் கணவன். கட்டிலில் மனைவி இல்லை. அவள் பக்கத்து அறையில் தனியாக படுத்திருப்பதை அவன் கண்டு கொண்டான்.

காலையில் அவன் அவள் படுத்திருந்த அறைக்குப் போனான். அவள் சொன்னாள், 'நாம் படுத்திருந்த கட்டிலில் ஒரே எறும்பு ஆதலால் இங்கே வந்து படுத்தேன்? என்றாள். எறும்பு என்கிறாளே.. அந்த எறும்பு ஏன் என்னைக் கடிக்கவில்லை? சரி எறும்பு இருந்தால் அவள் என்ன செய்திருக்க வேண்டும். தன்னை அவள் எழுப்பி எறும்புக்காக படுக்கை விரிப்பை உதறி மீண்டும் படுத்திருக்கலாமே! எறும்பு என்பது அவனுக்கு பொய்யாகவே பட்டது.
'என்ன ஏன் சிரிக்கிறியள்..' என்றாள் மனைவி அவன் சொன்னான்....

'பொய்யைச் சொன்னால் உனக்கு மகிழ்ச்சி உண்மையைச் சொன்னால் உனக்கு கோபம் வருமே... நானென்ன செய்ய.. எதைச் சொல்ல....' அவள் மௌனியானாள்.

– கற்பனையா –

**சமைக்க(ற்)க்க...**

பாறனைக்கு
அம்மாள்
மரக்கறி சமைக்க
தவறனைக்கு
அம்மான்
பாஞ்சு நழுவுகிறார்
மரக்கறி சமிக்க

- சிசு -

# சொல்லத்தான் நினைக்கிறேன்

**9** – ப. மனோகரன் –



**ஒவ்வொருவருக்கும் அவரவர் வயது வளர்ச்சியோடு அந்த வயதுக்கு உரிய உணர்வு முதிர்ச்சியும் ஏற்பட்டுவிடுகின்றது. அம்மாதிரியான உணர்வு முதிர்ச்சி பெறாதவர்களின் வாழ்க்கையில் இன்பமும், வெற்றியும் தோன்றுவது அரிதாகி விடுகின்றது.**

**உணர்வில் முதிர்ச்சி தோன்ற நீங்கள் என்ன செய்யவேண்டும்? இதோ சில விதிகள்:**

உங்களுக்கு எத்தனை வயது என்பதனை, நீங்கள் வாழ்ந்த வருடங்களின் எண்ணிக்கை நிர்மாணிப்பதில்லை. பிறந்த தினங்கள், நீங்கள் வாழ்ந்த வருடங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகின்றன. ஆனால் மனோரீதியாகவும், உணர்ச்சி ரீதியாகவும் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாக முதிர்ச்சி பெறுகின்றனர்.

சிலரைப் பொறுத்தவரை அவர்கள் வயோதிபர்கள் ஆவதே இல்லை. எந்த வயதிலும் சிறு பிள்ளைகள் போல வேறாயிருக்கின்றார்கள். இந்நிலமை என்றும் அவர்களுக்குத் தொல்லை தருவதாக, ஏனையோர் அவர்களை அதிகாரம் செய்வதற்கு ஏதுவாக அமைகின்றது.

உணர்ச்சிகள் உங்களை ஆள ஒவ்வொருவருக்கும் அவரவர் வயது வளர்ச்சியோடு அந்த வயதுக்கு உரிய உணர்வு முதிர்ச்சியும் ஏற்பட்டுவிடுகின்றது. அம்மாதிரியான உணர்வு முதிர்ச்சி பெறாதவர்களின் வாழ்க்கையில் இன்பமும், வெற்றியும் தோன்றுவது அரிதாகி விடாமல், நீங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டும். பிரச்சனைகளை யதார்த்த பூர்வதாக உணரக்கூடியதாக சிறு பிள்ளைத்தனங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

உங்களுடைய எண்ணங்கள், பழக்கவழக்கங்கள், செயல்கள் யாவும் உங்களது உணர்வின் முதிர்ச்சியைக் கட்டுவதாக அமைதல் வேண்டும். இதனால் நீங்கள் மகிழ்ச்சியும், பெயரும், புகழும், வெற்றியும் பெறுவது நிச்சயமாகும்.

எந்தக் காரியத்தினையும் உங்கள் சக்திக்கு முடிந்தவரை சிறப்பாகச் செய்யுங்கள், ஆனால் அதற்காகப் பாராட்டுகளை எதிர்பார்க்காதீர்கள். ஆனால் நிச்சயம் அதனால் பாராட்டு உங்களுக்கு வரத்தான் செய்யும்!

உங்களது தன்னம்பிக்கையை இலகுவில் இழந்து விடாதீர்கள். அவசர நேரங்களில் நிதானமாக கருமமாற்றுங்கள் பதற்றத்தைக் காட்டக்கூடாது.

தனிமையாக இருக்க நேரிடும்





சந்தர்ப்பத்தில் சலிப்புக் கொள்ளாதீர்கள். தனிமையை எவ்விதம் மகிழ்ச்சியாகக் கழிக்க வேண்டும் என்பதனை நீங்கள் தெரிந்திருக்க வேண்டும்.

உங்கள் குடும்பத்தவருடன் எப்போதும்சுமுகமான இனிமையான உறவை வைத்திருத்தல் வேண்டும்.

ஒரு தவறினை நீங்கள் செய்து விட்டால் அதனை வெளிப்படையாக ஒப்புக் கொள்ளுங்கள். நீங்கள் பிழை செய்துவிட்டீர்கள் என்று யாராவது சொன்னால், நீங்கள் செய்த காரியம் பிழையான தானா எனபதனை ஆராய்ந்து பார்க்காமல் 'நான் பிழை செய்வேனா?' என்று சண்டைக்குப் போகாதீர்கள், அதற்கு உங்களிடம் நிறைந்த சுய கட்டுப்பாடு வேண்டும்.

எங்கே போனாலும் நான் தான் முதலில் நிற்க வேண்டும் என்று விரும்பாதீர்கள். மற்றவர்களை முதலில் நிற்கும்படி கூறுங்கள். நிச்சயமாக உங்களைத்தான் முன்னுக்கு நிற்கும் படி கூறுவார்கள்.

வரவுக்கு மிஞ்சிய செலவினைச் செய்து கஷ்டமுறுவது முதிர்ச்சியின் மையைக் காட்டும். எனவே, வரவுக்குத் தகுந்தவாறு திட்டமிட்டுச் செலவு செய்யுங்கள்.

நீங்கள் அதிகாரத்தில் மேலானவர் என்பதனை எப்போதும் மற்றவர்களிடம் காட்ட முற்படாதீர்கள், உங்கள் முதன்மையையும், அதிகாரத்தினையும் நீங்கள் காட்டத் தேவையில்லை, அது தானாகவே வெளிப்படும்.

நீங்கள் குழம்பியோ, கவலையுற்றோ இருக்கும் நேரத்தில் பதற்றத்தைக் காட்டாதீர்கள், மற்றவர்களை வெறுக்காதீர்கள். எவர்மீதும் தீவிரமா எதிர்ப்பையோ வெறுப்பையோ கொள்ளாதீர்கள், மற்றவர்களின் உணர்ச்சிகளுக்கும் மதிப்புக்கொடுங்கள். தற்கொலைப்பற்றி ஒருபோதும் எண்ணவே கூடாது.

கடுமையானஎதிர்ப்புக்கு மத்தியல் ஒரு விஷயத்தினை நீங்கள் விவாதிக்கின்ற போது உறுதியாகப் பேசுங்கள். அத்துடன் மற்றவர்களைக் கோபம் கொள்ள வைத்தலாகாது. எவ்வளவுதூரம் அறிவு வளர்ந்திருக்கின்றதோ, அதற்கேற்றவாறு இறுமாப்பும் குறைகின்றது.

பேசுவதற்கு முன்னர் யோசித்துவிட்டுப் பேசுங்கள். நீங்கள் பின்னர் வருத்தப்படக்கூடிய சொற்களைப் பேசாதீர்கள். மற்றவர்களின் வார்த்தைகளினால் மனம் குழம்பிப் போகாதவாறு பாரத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களையும் புண்படுத்தாதீர்கள்.

உங்களுடைய தவறுகளுக்கும், தோல்விகளுக்கும் மற்றவர்களைக் குறை கூறாதீர்கள், தவறு எங்கே இருக்கின்றது என்று சரியாகக் கண்டுபிடித்துத் திருத்திக் கொள்ளுவது வெற்றிக்கு வழி கோலுவதாக இருக்கும்.

நீங்கள் உண்மையில் தாழ்ந்தவராக இருந்தாலும் உங்களுக்குத் தாழ்வுணர்ச்சி வரக்கூடாது.


மற்றவர்களிடமிருந்து அனுதாபத்தினை

எதிர்பாராதீர்கள். மற்றவர்கள் வெற்றிபெறும் போது பொறாமை கொள்ளாதீர்கள். நீங்கள் ஓர் இலட்சியவாதியாக இருந்தால், இது மிகவும் கஷ்டம் தான். அப்படியென்றால், மற்றவர்களுக்கு வழக்கத்துக்கு மாறான அதிர்ஷ்டம் கிடைக்குமானால், கடுமையாக உழைக்க நீங்கள் திடசித்தம் கொள்ள வேண்டும்.

மற்றவர்களுடன் கோபம் கொள்ளாதீர்கள். அதுமுடியா விட்டால் அடிக்கடியாவது கோபிக்காது இருங்கள்.

பகற்கனவு காண்பதை நிறுத்தவேண்டும். அதற்குப் பதிலாக முன்னேற்றத்துக்குத் திட்டம் போடுங்கள். பகற்கனவு காண்பது என்பது இளம் பிராயத்துக்கு உள்ள செயலாகும். உணர்வில் முதிர்ச்சியடைந்தவர்களுக்கு அல்ல.

எதிர்காலத்துக்காகக் காத்திருக்காதீர்கள். அதற்காக ஆயத்தம் செய்யுங்கள்.



இலக்கியத்திருந்து

# வஞ்சிமா நகரமும் வஞ்சியும்

பசுமை வளங் கொழிக்கும் சேர நாடு. அதனை தொலைவே ஒரு கிராமம். அக்கிராமத்தின் அருகாக ஓடுகின்ற அழகிய அருவியில் நீராடுகின்றது கன்னியர் குழாமொன்று. அவர்களுள்



– இளமாறன் –





முக்கியமான மடந்தை ஒருத்தி தான் முந்திய நாள் இரவு கண்ட கனவைத் தன் தோழியிடம் கூறுகின்றாள். அதைக் கூறும் போது அவ்விளம் மங்கையின் வதனம் இரத்தச் சிவப்பாகின்றது. காரணம் அவள் கண்ட கனவு அவளது திருமணத்தைக் குறிப்பது போல் உள்ளது. ஆனால் கனவைக் கூறி முடிக்கும் போது மிகுந்த ஏமாற்றம் கலந்த மன வருத்தம் அவளது வார்த்தைகளிற் றென்படுகின்றது அவள் கனவிலே கண்டது.

சேர நாட்டு அரசனைக் கண்டாள் அக்காரிகை. காதல் கொண்டாள். தன்னை அவன் கடிமனம் புரிவான் என நம்பினாள். ஆனால் கனவுக் காதலுக்கும் கல்யாணம் என தன் தோழியிடம் முறையிடுகிறாள். பின்வரும் செய்யுளின் மூலம் அவள் தன்னுணர்வை அழகாகத் தோழியிடம் வெளிப் படுத்துகின்றாள்.

**'வஞ்சியான் என்றவன்**
**தன்பேருரைத்தான்**
**யானுமவன்**
**வஞ்சியான் என்பதால்**
**வாய்நேர்ந்தேன்**
**வஞ்சியே**
**வஞ்சியேன் வஞ்சியேன்**
**என்றென்றே**
**உரைத்தென்னை**
**வஞ்சித்தான்**
**வஞ்சியர்கோ'**

இங்கு வஞ்சியென்பது பல்வேறு இடங்களில் வருகின்றது. எனவே இதைப்பற்றி சிறிது ஆராய்வோமாகில் இலக்கிய மணம் கமழும் சொற்சுவையை நாம் உணரலாம்.

பாடலின் உட்கருத்தை நோக்குமுன்பாக "வஞ்சி" என்பதைப் பற்றி சில விளக்கங்களைப் பார்ப்போம் "வஞ்சி" என்பது சேரநாட்டின் தலை நகரமாகும். அது மட்டுமல்லாமல் சேரப் பெருங்குடி மக்கள் வஞ்சிப்பூவையே மார்பிலும் முடியிலும் சூடிக் கொள்வர். அதனால் அவர்கள் வஞ்சியர் என அழைக்கப்படுகின்றனர். அத்தோடு இளநங்கையையும் "வஞ்சி" என அழைப்பார்கள், நம்மவர்கள். வஞ்சித்தல் (ஏமாற்றுதல்) என்பதன் வினை அடியாகவும் "வஞ்சி" என்பது வரும். எனவே இங்கு வஞ்சியர் என்பது இரு கருத்தைத் தருவதாக உள்ள. பெண்கள் கூட்டமென்பது ஒரு கருத்து. சேர நாட்டவர் என்பது மறுகருத்து.

இப்போது பாடலின் கருத்தைப் பார்ப்போம். வஞ்சியான் என்றவன் தன் பேருரைத் தான் வஞ்சி நகரத்துக்குரியவன் என்று அவன் தன் நாமத்தைச் சொன்னான். யானும் அவன் வஞ்சியான் என்பதனால் வாய் நேர்ந்தேன். நானும் அவன் வஞ்சிக்கமாட்டான். அதாவது

ஏமாற்ற மாட்டான் என்பதனால் அவனது ஆசைக்கு சம்மதம் என்று வாய் மலர்ந்தேன். வஞ்சியேன் இளம் மங்கையோ; வஞ்சியேன் வஞ்சி நகரத் தலைவனான நான்; வஞ்சியேன். ஏமாற்றமாட்டேன்; என்றென்றே உரைத்து என்று சபதம் இட்டு; என்னை வஞ்சித்தான் என்னை ஏமாற்றினான்; வஞ்சியர்கோ சேரர்களில் தலைவன்.

அதாவது "சேரநாட்டு அரசன் என்று அவன் தன்னை அறிமுகப்படுத்தியதால், அவன் என்னை ஏமாற்ற மாட்டான் என்று நானும் அவனது காதலுக்குச் சம்மதம் தெரிவித்தேன். இளம் மங்கையே! உன்னைக் கைவிட மாட்டேன் என்று சூளுரைத்து இறுதியில் ஏமாற்றி விட்டான். அந்த சேர அரசன் என்ற பூரண கருத்துக் கொண்டது இப்பாடல்.

வாய்நேர்தல் என்பது ஒரு மரபுத் தொடர். இது சம்மதம் தெரிவித்தலைக் குறிக்கின்ற ஒரு தொடராகும்.

இதே வேளை இன்னொரு விதமாகவும் இதை அணுக இடமுண்டு இப்பாடலுக்குரிய பாட்டுடைத் தலைவன் சேர அரசன் அல்ல. இளம் மங்கையின் காதலன் என்று கூடப் பொருள் கொள்ளலாம். ஏனெனில் சேர அரசனைக் குறிக்கின்ற வஞ்சியான், வஞ்சியேன், வஞ்சியர்கோ என்னும் சொற்றொடர்களுக்கு பெண்களுக்குரியவன் பெண்களின் தலைவன் (பெண்களால் விரும்பப்படுபவன்) என்றும் பொருள் கொள்ள இடமுண்டு இதன்படி அதிகமான பெண்களினால் விரும்பப்படும் ஆணழனாகிய தன் காதலன் தன்னை ஏமாற்ற மாட்டாள் என்று எண்ணித் தானும் அவனைக் காதலித்து இறுதியில் அவன் தன்னை ஏமாற்றி விட்டான் என்று தோழியிடம் முறையிடுவதாகவும் நாம் பொருள் கொள்ள இடமுண்டு.

இப்பாடலில் உள்ள இலக்கணச் சுவையை நோக்கும் போது, "வஞ்சியான்" என்று குறிக்கின்ற கருத்து (சேர நாட்டு மன்னன் என்பது) மீண்டும் "வஞ்'சியேன்" என எடுத்தாளப்படுகின்றது. அதாவது வஞ்சிக்குரியவன் என்பது பிறர் கூற்றின் வாயிலாகக் கூறப்படும் போது "வஞ்சியான்" என்றும், அதுவே தன் கூற்று வாக்கியத்தினூடாகச் சுட்டிக் காட்டப்படும் போது "வஞ்சியேன்" என்றும் உரைக்கப்படுகின்றது. சேர மன்னனைக் குறிக்கும் வஞ்சியான் மட்டுமல்ல "ஏமாற்ற மாட்டேன்" என்பதனைக் குறிக்கும் "வஞ்சியேன்" என்பதும் இப்படியே உணர்த்தப்படுகின்றது. ❋

**தன் பசியைத் தணிக்க
பிறன் பசியைத் தீர்க்கிறாள்
இந்த விபசாரி.**

தொண்டைமானாறு ... சங்கம் (stamp)